# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று (24 – 7 – 2025) நிகழ்வுகள்!



### 1. சுதந்திர தினம் முதல் வணிக நோக்கமற்ற வாகனங்களுக்கு டோல் கேட் வருடாந்திர பாஸ்:

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



திமுக துணைப் பொதுச் செயலாளரும் திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி. தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் பற்றிய கேள்விகளை மக்களவையில் எழுப்பினார். அதன் விவரங்கள்:

ஒன்றிய நெடுஞ்சாலை துறையால் நாடு முழுவதும் இயக்கப்படும் சுங்கச் சாவடிகள் எனப்படுகிற டோல் கேட்டுகளின் எண்ணிக்கை மாநில வாரியாக எவ்வளவு? குறிப்பாக தமிழ்நாட்டில் எத்தனை டோல்கேட்டுகள் இயங்குகின்றன?

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சலுகை ஒப்பந்த காலம் முடிந்த பின்னரும் கூட டோல்கேட்டுகளில் கட்டணம் வசூலிக்கப்படும் விதிமீறல்கள் நடப்பதையும், இதனால் மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதையும் ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

அவ்வாறு ஒப்பந்த காலம் முடிந்த பின்னரும் கட்டண வசூலில் ஈடுபட்டு வரும் டோல்கேட்டுகளின் எண்ணிக்கை எத்தனை? விதிகளை மீறி தொடர்ந்து கட்டணம் வசூலிக்க என்ன காரணம்?

இந்த சுங்கச்சாவடிகளைத் தணிக்கை செய்து, பொதுமக்களிடம் அதிக கட்டணம் வசூலித்ததற்காக ஒப்பந்ததாரர்களை பொறுப்பேற்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுதும் தினசரி பயணிகள் மற்றும் சிறு வணிகர்கள் மீதான சுங்கக் கட்டணச் சுமையை அரசு மறுபரிசீலனை செய்து, நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலித்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?" என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விகளை அடுக்கியிருந்தார்.

### 2. தேசிய நெடுஞ்சாலை - 87 (NH)ஐ மேம்படுத்துக!

**ஆ. இராசா**



பரமக்குடி-ராமநாதபுரம் பகுதியை இணைக்கவும், தற்போதுள்ள நெரிசலைக் குறைக்கவும் தேசிய நெடுஞ்சாலை (NH)-87ஐ நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தும் திட்டம் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி மக்களவை உறுப்பினருமான ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் நடப்பு நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட தொகை

நபர்-நாட்களின் அடிப்படையில் மறைமுக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட வாய்ப்புள்ளதா; மற்றும் இத்திட்டம் எப்போதிருந்து பயன்பாட்டுக்கு வரும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 3. தமிழ்நாட்டில் நீர்ப்பாசன பரப்பளவை விரிவுபடுத்துக

**தர்மபுரி ஆ.மணி கோரிக்கை**



கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட மொத்த பரப்பளவு விவரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தர்மபுரி மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் கேட்டுள்ளதாவது:

தர்மபுரி மக்களவைத் தொகுதிக்கான குறிப்பிட்ட புள்ளிவிவரங்களுடன், மேற்கூறிய காலகட்டத்தில் பல்வேறு மத்திய மற்றும் மாநில திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டில் நீர்ப்பாசனப் பரப்பளவை விரிவுபடுத்துவதற்கு அரசு ஏதேனும் இலக்குகளை நிர்ணயித்துள்ளதா, அப்படியானால், தர்மபுரியைக் குறிப்பிட்டு மாவட்ட வாரியாக அதன் விவரங்கள் என்ன?

தர்மபுரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு, தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீர்ப்பாசன உள்கட்டமைப்பை நவீனமயமாக்கவும் மேம்படுத்தவும், விவசாயிகளிடையே சமமான நீர் விநியோகத்தை உறுதி செய்யவும் அரசு எடுத்த குறிப்பிட்ட நடவடிக்கைகள் என்ன?

### 4. விமான விபத்துகளை தடுக்க நடவடிக்கை என்ன?

**சேலம் டி.எம்.செல்வகணபதி கேள்வி**



அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் AI-171 விபத்து குறித்து விசாரிக்கவும், அந்த விபத்தின் பின்னணியில் விமான விபத்துகளுக்கு பதிலளிக்க "விரிவான வழிகாட்டுதல்களை" பரிந்துரைக்கவும் அரசாங்கம் அமைத்துள்ள உயர்மட்டக் குழுவின் செயல்பாடுகள் குறித்து சேலம் திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில், உயர்மட்டக் குழுவின் தற்போதைய நிலை மற்றும் அதன் அறிக்கைகள் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விபத்துகளைத் தடுக்கவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கவும் ஒரு வரைபடத்தைத் தயாரிக்க அத்தகைய குழு எப்போது அமைக்கப்படும்?

எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்கும் கையாளுவதற்கும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOPs) வகுப்பதில் இந்தக் குழு கவனம் செலுத்தி, மூன்று மாதங்களுக்குள் அதன் அறிக்கையை வெளியிடுமா?

முன்மொழியப்பட்ட குழு தொடர்புடைய அமைப்புகளால் நடத்தப்படும் பிற விசாரணைகளை மாற்றாது என்பதற்கான உறுதி என்ன? மற்றும் 12.6.2025 அன்று அகமதாபாத்தில் விமான விபத்து நடந்தபோது மீட்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 5. விமானிகளுக்கு புத்துணர்வு பயிற்சி

**ஆர். கிரிராஜன் கோரிக்கை!**



விமானிகளின் உடல், மனம் ஆகிய வற்றின் உறுதித் தன்மை மற்றும் பறக்கும் தகுதியை உறுதி செய்வதற்காக சிறப்பு புத்துணர்வு பயிற்சியை வழங்குவது குறித்து, அகமதாபாத் விமான விபத்துக்கு பிறகு அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு ஆலோசிக்க இருப்பதாக, திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு, ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் பதிலளித்துள்ளார்.

குஜராத்திலிருந்து ஜூன் 12ஆம் தேதி லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் ரக விமானம் வானை தொடுவதற்கு விழுந்து நொறுங்கியதில் 260 பேர் பலியாகி, 68 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துக்கு பிறகு கூடிய நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் பேசிய திமுக எம்.பி. இரா. கிரிராஜன், விமானிகளின் நலன், பயணிகளின் பாதுகாப்பு குறித்து சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

ஒவ்வொரு விமானமும் புறப்படுவதற்கு முன்பான வழக்கமான ஆய்வுகள் செய்யப்பட்டதா? பாதுகாப்புத் தணிக்கைகளின் போது பின்பற்றப்பட வேண்டிய புதிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளை ஒன்றிய அரசு வகுத்துள்ளதா, அதற்காக ஏதேனும் உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளதா என அவர் கேட்டிருந்தார்.

விமானிகள் ஓராயிரம் மணிநேர விமான இயக்கத்தை முடித்த பிறகு அவர்களின் உடல், மனம், உணர்ச்சி ஆகிய வற்றின் உறுதித்தன்மை நிலையானதாகவும், பறக்க தகுதியானதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக சிறப்பு புத்துணர்வு பயிற்சியை வழங்கவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

### 6. MSME-களை ஊக்குவிக்கும் திட்டங்களின் நிலை என்ன?

**திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை மற்றும் ஜி. செல்வம் கேள்வி!**





தமிழ்நாடு மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (MSME) ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தால் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி என் அண்ணாதுரை மற்றும் ஜி. செல்வம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

இதுவரை அறிவித்த திட்டங்களின் நோக்கங்கள், இலக்கு மற்றும் பயனாளிகள் குறித்த விவரங்கள் என்ன?

MSME-களின் வளர்ச்சி, போட்டித்தன்மையை ஊக்குவித்தல், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புதுமைகளை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நடைபெரும் முக்கிய முயற்சிகள் யாவை?

மானியக் கடன் திட்டங்களின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் தமிழ்நாட்டில் MSME-களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிதியின் அளவு என்ன?

தமிழ்நாட்டில் MSME துறையை மேலும் ஆதரிக்க பரிசீலனையில் உள்ள திட்டங்கள் மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்கான காலக்கெடு என்ன? என்றும் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

### 7. நீர் பாதுகாப்புக்கான நிதி உதவி!

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி கேள்வி!**



நாட்டின் கிராமப் புறங்களில் நீர் பாதுகாப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு வழங்கவேண்டிய தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி குறித்து பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக தேசிய கிராமப்புற குடிநீர் திட்டத்தின் (NRDWP) கீழ் ஏதேனும் வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டிருந்தால் அதன் விவரங்களையும் அவர் கோரியுள்ளார்.

### 8. அனைவருக்கும் தடையின்றி சமையல் எரிவாயு! உடனடியாக கிடைக்க நடவடிக்கை என்ன?

**ஈரோடு கே.இ.பிரகாஷ்!**




பின்தங்கிய பகுதிகளில் வரையறுக்கப்பட்ட விநியோக உள்கட்டமைப்பு உட்பட பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY) திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து ஒன்றிய அரசாங்கத்திடம் ஈரோடு திமுக மக்களவை உறுப்பினர் கே. ஈ. பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

வழக்கமான திரவ பெட்ரோலிய எரிவாயு (LPG) நிரப்புதலுக்கான தடைகளை நீக்கவும், மற்றும் கண்காணிப்பு அல்லது தணிக்கை அமைப்புகளில் உள்ள இடைவெளிகளை அகற்றவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

நாடு முழுவதும் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த வீடுகளில் சுத்தமான சமையல் எரிபொருட்கள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக விநியோக வலையமைப்புகளை வலுப்படுத்துதல், மலிவு விலையில் மறு நிரப்பல் செய்வதை மேம்படுத்துதல், டிஜிட்டல் கண்காணிப்பு மற்றும் தணிக்கை வழிமுறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 9. ஊரக மின்மயமாக்கல் கழகம் வழங்கிய கடனுதவி விவரங்கள் என்ன?

**வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி**



ஊரக மின்மயமாக்கல் கழகம் (REC), மின் உற்பத்தி திட்டங்கள், மின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக தனியார் லிமிடெட் நிறுவனங்களுக்கு கடன்களை வழங்கி வருகிறதா என கேட்டு வேலூர் மக்களவை தொகுதி திமுக உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

கடந்த நான்கு ஆண்டுகளில் நிறுவனங்கள் வாரியாக, RECஆல் கடன்கள் வழங்கப்பட்ட தனியார் லிமிடெட் நிறுவனங்களின் விவரங்கள், கடந்த மூன்று ஆண்டுகளில் REC தனியார் நிறுவனங்களுக்கு வழங்கிய மறுநிதியளிப்பு கடன்களின் விவரங்கள் என்ன? தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் தனியார் லிமிடெட் நிறுவனங்களுக்கு REC கடன்களை வழங்கியுள்ளதா?

### 10. தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் நிலை என்ன?

**காஞ்சிபுரம் ஜி.செல்வம் மற்றும் திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை கேள்வி**

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் முன்மொழியப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட புதிய தேசிய நெடுஞ்சாலைகள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதன் விவரம் பின்வருமாறு:

தேசிய நெடுஞ்சாலை (NHs) திட்டங்களின் விவரங்கள், அவற்றின் திட்ட காலக்கெடு, அனுமதிக்கப்பட்ட நீளம் மற்றும் எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதிகள் என்ன?

கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை, ஆண்டு வாரியாக வெளியிடுக.


தமிழ்நாட்டில் நடந்து வரும் தேசிய நெடுஞ்சாலை திட்டங்களின் தற்போதைய நிலை, மாவட்டம் மற்றும் இடம் வாரியாக மற்றும் தற்போது தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் என்ன?

நடப்பு நிதியாண்டிலும் கடந்த மூன்று ஆண்டுகளிலும் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்புக்காக அரசு செய்த மொத்த பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவு, ஆண்டு வாரியாக வெளியிடுக.

தமிழ்நாட்டின் தொலைதூர, பின்தங்கிய அல்லது வளர்ச்சியடையாத பகுதிகளில், குறிப்பாக வரலாற்று ரீதியாக குறைந்த உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ள மாவட்டங்களில் நெடுஞ்சாலை இணைப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### 11. கிராமங்களில் இணைய இணைப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**டாக்டர் கனிமொழி சோமு கேள்வி**



இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் டிஜிட்டல் இந்தியா முயற்சியின் விவரங்கள் குறித்து மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். கிராமங்களில் இணைய இணைப்புகளின் அணுகல் நிலை. கடந்த ஐந்து ஆண்டுகளில் இணைய பயனாளிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு குறித்த விவரங்கள் மற்றும் கிராமங்களில் இணைய இணைப்பை மேம்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/ எடுக்க முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்று அவர் ஒன்றிய அரசின் தொலைத் தொடர்புத்துறை அமைச்சகத்திடம் கேட்டுள்ளார்.



சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சி சமுதாயக்கூடத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (24.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, வட்டாட்சியர் ரவிக்குமார், ஓமலூர் பேரூராட்சி தலைவர் திருமதி செல்வராணி ரவிச்சந்திரன், செயல் அலுவலர் திரு.சந்திரகுமார் ஆகியோர் உள்ளனர்.

### சேலம் மாநகராட்சி – கொண்டலாம்பட்டியில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்! 109 மனுக்களுக்கு உடனடித் தீர்வு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல்!

சேலம், ஜூலை 25-

"உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் நேற்றைய தினம் மனு வழங்கிய 109 நபர்களுக்கு உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது என "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல் தெரிவித்தார்.

சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி மண்டலம், வார்டு 45க்கு உட்பட்ட பகுதிகளுக்கு சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள நேரு கலையரங்கம் மற்றும் ஓமலூர் பேரூராட்சி பகுதிகளுக்கு ஓமலூர் பேரூராட்சி சமுதாயக்கூடத்திலும் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (24.07.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 23.07.2025 நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 2,366 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 3,475 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று 24.07.2025 சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி மண்டலம் வார்டு - 45க்குட்பட்ட பகுதிகளுக்கு சேலம் பழைய பேருந்து நிலையம், நேரு கலையரங்கத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, செட்டிச்சாவடி பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு செட்டிச்சாவடி, மாந்தோப்பு ஊரடி மாரியம்மன் கோவில் அருகிலும், சங்ககிரி நகராட்சி வார்டு - 1, 2, 4 க்குட்பட்ட பகுதிகளுக்கு சங்ககிரி, சத்தைப்பேட்டை, வார்டு 2 சமுதாயக்கூடத்திலும், ஓமலூர் பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6, 7க்குட்பட்ட பகுதிகளுக்கு ஓமலூர், வார்டு 10, செவ்வாய் சந்தை சாலையில் உள்ள பேரூராட்சி சமுதாயக்கூடத்திலும், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், டேனிஷ்பேட்டை பகுதிக்கு பெரியவடகம்பட்டி, சுப்ரமணி மஹாலிலும், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம், சின்னக்கவுண்டனூர் பகுதிக்கு குப்பனூர் நெடுஞ்சாலையில் உள்ள ஆ.கே.எஸ் மஹாலிலும் நடைபெற்று வருகிறது.

சேலம் மாநகராட்சி, நேரு கலையரங்கத்தில் நடைபெற்ற முகாமில் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 102 நபர்களுக்கு சொத்துவரி ஆணைகளும், 7 நபர்களுக்கு பிறப்புச்சான்றிதழ்களும், ஓமலூர் பேரூராட்சி சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற முகாமில் ஒரு மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர சைக்கிளும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு காதொலி கருவியும் என மொத்தம் 111 நபர்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் எவ்வித சிரமமும் இன்றி தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கிடும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இம்முகாமில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையர் இளங்கோவன், அம்மாபேட்டை மண்டல உதவி ஆணையர் வேடியப்பன், அம்மாப்பேட்டை மண்டலக்குழுத் தலைவர் கே.டி. தனசேகர், வட்டாட்சியர்கள் பார்த்தசாரதி (சேலம்), ரவிக்குமார்(ஓமலூர்), ஓமலூர் பேரூராட்சித் தலைவர் திருமதி செல்வராணி ரவிச்சந்திரன், செயல் அலுவலர் சந்திரகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செஞ்சி ஒன்றியத்தில்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

செஞ்சி, ஜூலை 25 -

செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்சிதம்பரத்தில் கடந்த 15 ஆம் தேதி முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம்முகாம் நடைபெற்றது

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி செயலர் நடராஜன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் அபர்ணா ரவிசங்கர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பே. மாரி அய்யா

**ஜூலை 25 (2020)**



**கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்" என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் "மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா" என்றும் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**